செ.வெ.எண்: 673 /2016 நாள்: 25.09.2016

# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாட்டில் மாநகராட்சிகள், நகராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளுக்கான சாதாரண தேர்தல்கள் 17.10.2016 & 19.10.2016 ஆகிய நாட்களில் இரண்டு கட்டமாக நடைபெற இருப்பதால், தேர்தல் நடத்தை விதிமுறைகளின்படி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் திங்கள் கிழமை தோறும் நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், வருவாய் கிராமங்களில் வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் அம்மா திட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர் ஆகியோர் தலைமையில் மாதந்தோறும் நடைபெறும் மனுநீதி நாள் சிறப்பு முகாம்கள், மீனவர்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், விவசாய கோரிக்கை நாள் கூட்டம் மற்றும் பிற மக்கள் தொடர்புடைய குறை தீர்க்கும் கூட்டங்கள் ஆகியவை தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருக்கும் வரை நிறுத்தி வைக்கப்படுகிறது. உள்ளாட்சித் தேர்தல் முடிவடைந்த பின்னர் இச்சிறப்பு முகாம்கள் மற்றும் நிகழ்ச்சிகள் நடைபெறும் நாள் குறித்த தகவல் பின்னர் தெரிவிக்கப்படும் என்ற விபரம் பொது மக்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.